

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேலம் செவ்வாய்பேட்டை பெரியார் நகர் பகுதியில் கட்டப்பட்டுவரும் அடுக்குமாடி குடியிருப்புகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் எல்.நிர்மல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி, அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (21.08.2025) சென்னை, பூங்கா நகர், காமாட்சி அம்மன் உடனுறை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், துணை ஆணையர் இரா.ஹரிஹரன், உதவி ஆணையர் க.சிவக்குமார், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜே. அசோக்குமார் முந்திரா, அறங்காவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி

# பூண்டி ஒன்றியத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்!

## டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கும்மிடிப்பூண்டி, ஆக.22-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, பூண்டி ஒன்றியத்தில் ஆட்ரம் பாக்கம், ஒதப்பை ஆகிய ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை, பராமரிப்பு உதவித்தொகை, சுயதொழில் கடனுதவி மனுக்கள். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையில் முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், ஆதரவற்ற குழந்தைகளுக்கான நிதி ஆதரவுத் திட்டத்தின் மனுக்கள், வேளாண்மை உழவர் நலத்துறையில் வேளாண்மை இயந்திரங்கள் கருவிகள் மானியம் மனுக்கள், சிறப்பு திட்ட செயலாக்கத்துறையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை தகுதியுள்ள / விடுபட்ட மகளிர்களின் மனுக்கள் ஆகிய துறையில் பெறப்பட்ட மனுக்களை அந்தந்த துறையில் உள்ள அரசு அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு உடனடியாக பொதுமக்கள் கோரிக்கைளை 45 நாட்களுக்குள் நிறைவேற்றிட வேண்டி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் கேட்டுகொண்டார்.

நிகழ்ச்சியில் பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஜான் (எ) பொன்னுசாமி, எஸ்.ரமேஷ், கிறிஷ்டி (எ) அன்பரசு, மோதிலால், எஸ்.ராமஜெயம், எம்.கேசவன், ஆர்.தில்லைக்குமார், வி.வெங்கடாத்திரி, ஸ்ரீராம், கே.விஜயன், ஆர்.ரகு, நா.சீனிவாசுலு, சிவய்யா, டி.சங்கர், ஆர்.காண்டீபன், எஸ்.சுதாகர், கே.பாபு, பா.சித்ராபாபு பூபாலன், டார்த்தி, பாஸ்கரன், பாலாஜி, கோட்டி, டி.குருமூர்த்தி, ஜி.கணேசன், பி.குப்பன், த.வேல்முருகன், நடராஜ ரெட்டி, பால்சதாகர், வி.நாகராஜ், எட்வாட்துரை, யுகேந்தர் தம்பு, நாகபூஷனம், சிவன், எல்.மோகன் கோபி, எம்.பாஸ்கர், பிரபாகரன், டி.ஆர்.கே.வாசு, பா.பரத்குமார், எம்.அஜீத், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுலோச்சனா, செல்வி, மேலாளர் பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு பேரூராட்சி பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ குடும்ப அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாற்றம் என 46 அரசு சேவைகளுக்கு பொதுமக்கள் மனு அளித்ததும் உடனடியாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடுத் திட்ட அட்டை, மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துகள் அடங்கிய தொகுப்பு, விவசாயிகளுக்கு வேளாண் இயக்க திட்டத்தின் கீழ் விதைகள் அடங்கிய தொகுப்பு மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு அரசு வழங்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பொருட்கள் அடங்கிய தொகுப்பு உள்ளிட்டவைகளை வழங்கினார் உடன் ஒன்றிய கழக செயலாளர் சி. ஜே. சீனிவாசன் சி.ஜே. செந்தில்குமார், மணிமேகலை நிர்வாகிகள் ஜி.சித்திக், விஜயலூ, செங்கையா, சிரஞ்சீவி, சேகர், கலீல், சதீஷ், ஆறுமுகம், முரளி, பானு, புவனா மோகன்ராஜ், உள்பட பலர் கலந்து கொண்டனர்

### 300 ஆண்டுகள் பழமையான

# பூங்கா நகர், ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு

சென்னை, ஆக. 22 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (21.08.2025) சென்னை, பூங்கா நகர், அருள்மிகு காமாட்சி அம்மன் உடனுறை ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்விற்கு பின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

சென்னை, பூங்கா நகர் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலானது சுமார் 300 ஆண்டுகள் பழமையானதாகும். இத்திருக்கோயிலுக்கு ரூ.5 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 19 ஆண்டுகளுக்கு பின், இன்று வெகு விமரிசையாக குடமுழுக்கு நடந்தேறியிருக்கின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு அமைந்தபின், இன்றைய தினம் நடைபெற்ற 11 திருக்கோயில்களின் குடமுழுக்கையும் சேர்த்து 3,412 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதில் 722 சிவன் திருக்கோயில்களும், 468 விநாயகர் திருக்கோயில்களும், 1,023 அம்மன் திருக்கோயில் களும், 523 பெருமாள் திரு க்கோயில்களும், 47 ஆஞ்சநேயர் திருக்கோயில்களும், 48 கிருஷ்ணன் திருக்கோயி ல்களும், அறுபடை வீடுகளை சேர்ந்த திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி திருக்கோயில்கள் உள்பட 132 முருகன் திருக்கோயில்களும் அடங்கும்.

திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,822 கோடி மதிப்பிலான 7,910 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இந்த அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறையில் ரூ.6,980 கோடி மதிப்பீட்டில் 27,563 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் உபயதாரர்கள் மட்டும் ரூ. 1,467 கோடி மதிப்பிலான திருப்பணிகளை செய்து தருகின்றனர். மாநில வல்லுநர் குழுவால் 13,931 திருக்கோயி ல்களின் திருப்பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க சாதனைகளுக்கு உறுதுணையாய் இருந்து வரும் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் துறையின் செயலாளர், ஆணையர் உள்ளிட்ட அலுவலர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திரு க்கோயிலுக்கு குடமுழுக்கு செய்வதற்கான திருப்பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இராஜகோபுர திருப்பணிக்கு மூன்றுமுறை ஒப்பந்தம் கோரப்பட்டும் நிறைவு செய்யப்படாததால் சற்று சுணக்கம் ஏற்பட்டது. அதனை விரைவுப்படுத்துவதற்கு ஆய்வு கூட்டங்களை நடத்தி அறிவுரைகளை வழங்கியுள்ளோம். வருகின்ற 30 ஆம் தேதிக்குள் நானும், துறையின் அலுவலர்களும் நேரடியாக கள ஆய்வு செய்து விரைவில் குடமுழுக்கு நடத்துவதற்கான பணிகளை மேற்கொள்வோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், துணை ஆணையர் இரா. ஹரிஹரன், உதவி ஆணையர் க.சிவக்குமார், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜே.அசோக்குமார் முந்திரா, அறங்காவலர்கள் ப.வெங்கடேசன், பு.நலேந்திர குமார், திருமதி பா.சசிகலா, ம.முத்துகுமார், செயல் அலுவலர் இரா. முத்துசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

### முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



திண்டுக்கல் பகுதி-3,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



துறையூர் மத்திய ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



கோட்டூர் வடக்கு ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம்.



நங்கவள்ளி வடக்கு ஒன்றியம்,
சேலம் மேற்கு மாவட்டம்.



கடத்தூர் கிழக்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



பல்லாவரம் வடக்குப் பகுதி,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.



புதுப்பாளையம் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



ஆரல்வாய்மொழி பேரூர்,
கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்.



கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியம்,
கோவை தெற்கு மாவட்டம்.